### மாணவர்களின் தெளிவு – துணிவு ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக்கட்டும்; அமைச்சரின் பதவி விலகல் முற்றல்ல – நீட்டை ஒழித்தே தீருவோம்!

# உரிமைப் போராட்டத்தில் வென்ற இளைஞர்களுக்குப் பாராட்டுகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 27-

மாணவர்களின் தெளிவையும், துணிவையும், உணர்வையும் அதிகாரத்தில் இருப்போர் குறைத்து மதிப்பிடுகிறார்கள். அநீதியை ஏற்காமல் நடைபெறும் இந்த எழுச்சி ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக்கட்டும் எனவும், அதே வேளையில் ஒன்றிய கல்வி அமைச்சர் பதவி விலகல் முற்றல்ல, மூன்று வேளாண் சட்டத்தை திரும்பப் பெற வைத்ததுபோல் நீட்டையும் ஒழித்தே தீருவோம். தங்களின் உரிமைகளுக்கான போராட்டத்தில் வென்ற இளைஞர்கள், மாணவர்களுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

**இந்தியாவின் உழவர்கள் முதலில் சாதித்துக் காட்டினார்கள்.**

**இப்போது இளைஞர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.**

**நாடு முழுதும் களத்திலும் இணையத்திலும் தங்களது உரிமைகளுக்காகப் போராடி இந்த வெற்றியைப் பெற்றுள்ள இளைஞர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்!**

**அதே வேளையில், தர்மேந்திர பிரதானின் பதவி விலகல் முற்றல்ல; மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற வைத்தது போல நீட்டையும் ஒழிப்போம்!**

**பொய்யான பரப்புரைகளாலும், வெற்று வாக்குறுதிகளாலும் இளைஞர்களைத் திசை திருப்பலாம் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால், தங்களின் எதிர்காலத்தைத் தாங்களே வடிவமைக்கத் தீர்மானித்திருக்கும் தலைமுறையின் தெளிவையும், துணிவையும், உணர்வையும் அவர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள்.**

**கேள்வி கேட்கவும், அரசியலில் பங்கேற்கவும், அநீதியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாமல் மறுக்கவும் இந்த எழுச்சி ஒரு தலைமுறைக்கு ஊக்கமளிக்கட்டும். விழிப்புணர்வும் அஞ்சாமையும் கொண்ட இளைஞர்களே எந்த ஜனநாயகத்திற்கும் வலிமையான அடித்தளம்."**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### சராசரி தனிநபர் வாங்கும் திறனில்

# கடும் ஏற்றத் தாழ்வு; சரிசெய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை.27-*

*நுகர்வோர் நிலையில் விலைவாசிகள் குறித்து அரசு அண்மையில் ஆய்வுகள் ஏதேனும் மேற்கொண்டதா? எனில், அதன் விவரங்களும் அவற்றின் வாயிலாகக் கண்டறிந்த நிலவரம் என்ன?*

*சென்ற மூன்று ஆண்டுகளில், பல்வேறு மாநிலங்களில், தனிநபர் நுகர் பொருள்களுக்கான மாதச் செலவு குறித்த விரிவான தகவல்கள் என்ன?*

*தனிநபர் நுகர்வு (consumption) அளவு மற்றும் வாங்குதிறனில் (purchasing power) இந்திய மாநிலங்கள் இடையில் பெரிய அளவில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன என்றால் அதன் விவரங்கள் என்ன?*

*மாநிலங்கள் இடையே நிலவும் பெரிய அளவிலான தனிநபர் வாங்கும் / நுகர்திறன் ஏற்றத்தாழ்வை நீக்க ஒன்றிய அரசு கொள்கை இடையீடு உள்ளிட்ட எடுத்த பல்வேறு நிவாரண நடவடிக்கைகள் என்னென்ன?*

*அமைச்சரின் விளக்கம் வருமாறு :-*

*நாட்டில் நிலவும் கடுமையான விலைவாசி உயர்வு காரணமாக பல்வேறு மாநிலங்களிலும் மக்களின் பொருட்கள் வாங்கும் திறன், செலவு செய்யும் சக்தி, நுகர் ஆற்றல் (consumption capacity) ஆகியவை பாதிக்கடப் பட்டுள்ளதைக் கருத்தில் இருத்தி இந்த கேள்வியை டி.ஆர். பாலு, எம்.பி. எழுப்பி இருந்தார். இதற்கு ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கல் துறைக்கான அமைச்சர் திரு. ராவ் இந்தர் ஜீத் சிங் அவர்கள் மக்களவையின் 22.7.2026 நடைபெற்ற அமர்வில் விரிவான பதில் அளித்திருந்தார்.*



*எழுத்து பூர்வமாக அமைச்சர் அளித்த பதிலில் தெரிவித்த விவரங்கள் வருமாறு :-*

*புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கல் அமைச்சகம் சமீப காலத்தில் நுகர்வோர் அளவிலான விலைவாசிகள் குறித்த குறிப்பிடத்தக்கஆய்வுகள் எதையும் மேற்கொள்ள வில்லை. ஆனால், நுகர்வோர் விலைவாசிகள் குறீயீடு (கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸ் CPI) தொகுத்தல் சம்பந்தப்பட்ட செயல்முறைக் கட்டமைப்பை, 2012 முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் அடித்தளங்களின் முழுமையான வலுவூட்டல் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2023-24 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மாதாந்திர குடும்ப செலவுகள் பற்றிய ஆய்வுகளில் கிடைத்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த முயற்சி செய்து முடிக்கப்பட்டது. கன்ஸ்யூமர் பிரைஸ் இண்டெக்ஸ் என்பது குடும்பங்கள் பயன்படுத்தும் பொருள்களின் விலைவாசியின் அளவையும் குறிப்பதாகும்.*

*2022-23 மற்றும் 2023-34 ஆகிய இரண்டு ஆண்டுகளில், ஆகஸ்ட் முதல் ஜூலை வரையிலான காலகட்டத்தில், குடும்பங்களின் நுகர்வுக்கான செலவு பற்றிய தகவல் சேகரிக்க பட்டன. இதற்கு முன், 2011-12 ஆம் ஆண்டில் தான் இத்தகைய ஆய்வு செய்ய ப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்த ஆய்வுகளின் படி, 2023-24 ல், அனைத்திந்திய அளவில் சராசரி தனிநபர் ( per capita) மாதாந்திர செலவு கிராம பகுதியில் ரூ 4122 , நகர்ப்புற பகுதியில் ரூ 6996 என்ற அளவில் இருந்தது .இது, முந்தைய ஆண்டை விட, கிராமப்புறத்தில் ரூ 340 ,நகர்ப்புறத்தில் ரூ 537 என்ற அளவுக்கு கூடியுள்ளது.*

*ஆனால் சிக்கிமில் ரூ.13927/-, சண்டிகரில் ரூ. 13425/- ,அந்தமான் நிகோபாரில் ரூ 10, 459 என தேசிய சராசரியை விட மிக மிக அதிகமாக உள்ளது. மாறாக, பல மாநிலங்களில் சராசரி மாதாந்திர தனிநபர் நுகர்வுச் செலவு என்பது, சத்திஸ்கர் மாநிலத்தில் ரூ4927/-, உத்தரப் பிரதேசத்தில் ரூ5395/-, ஜார்கண்டில் ரூ 5393/- என மிகவும் குறைந்த அளவில் உள்ளது.*

**தமிழ் நாட்டின் நிலைமை; தேசிய சராசரியை விட அதிகம்!**

*த மி ழ் ந ா ட் டை ப் பொறுத்த வரையில், சராசரி தனிநபர் மாதாந்திர செலவு, 2022-23 ல் கிராமப் பகுதியில் ரூ 5310 /- ,நகர்ப் புறத்தில ரூ.7630 /- ஆகவும், 2023-24 ல் அதிகரித்து, கிராம பகுதிகளில் ரூ 5701/- நகர்ப்புற பகுதியில் ரூ8165/- என்ற அளவிலும் மேம்பட்டுள்ளது. தேசிய சராசரியுன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டு மக்களின் தனிநபர் சராசரி மாதாந்திர செலவு என்பது, கிராமப் புற மக்களைப் பொறுதவரையில் ரூ.1509/- கூடுதலாக வும், நகர்ப்புற மக்களைப் பொறுவரை ரூ.1169/- கூடுதலாகவும் உள்ளது.*

**உ.பி., பீகார் உள்ளிட்ட 12 மாநிலங்கள் பின்தங்கிய நிலை!**

*2023-24 கணக்கெடுப்பு புள்ளிவிவரங்களின் படி தேசிய சராசரியை விட, 12 மாநிலங்கள் குறைவான தனிநபர் மாதாந்திர நுகர்வு செலவுத் திறனுடன் இருப்பது தெரியவந்துள்ளது . இதில், அசாம்,பீகார்,சத்தீஸ்கர், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், மணிப்பூர், ஒரிசா, ராஜஸ்தான், மேற்கு வங்கம், தாத்ரா நாகர் ஹவேலி, ஜம்மு காஷ்மீர், லட்சத்தீவுகள் அடங்கும்.*

**ஒன்றிய அரசின் முன்னெடுப்புகள்!**

*இந்த நிலையில் முன்னேற்றம் கொண்டுவர ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கொள்கை சார்ந்த இடையீடுகளும் இதில் அடங்கும். குடும்பங்களின் வாங்கும் திறன் மற்றும் நுகர்வு சக்தியை அதிகரித்தல், மாநிலங்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல் போன்றவை இதில் உள்ளடங்கும். குறிப்பாக உட்கட்டமைப்பு திட்டங்களில் தொடர்ச்சியாக முதலீடு செய்வது, வேலை வாய்ப்புகள் மற்றும் திறன் மேம்பாட்டுக்கு நீடித்த ஆதரவு பி.எம்.முத்ரா போன்ற நிதி உதவித் திட்டங்கள் மூலமாக எளிதில் கடன் வழங்குதல் போன்ற முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் ராவ் இந்தர்ஜீத் சிங் தனது விரிவான பதிலில் உரிய தரவுகளுடன் தெரிவித்தார்.*





பெருநகர சென்னை மாநகராட்சி விருகம்பாக்கம் 128வது வார்டு லட்சுமி நகரில் உள்ள சிறுவர் விளையாட்டுத் திடலை சீரமைக்ககோரி பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் பேரில் ரூ.3.50 இலட்சத்தில் மறுசீரமைப்பு பணிகள் செய்து சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பள்ளி வாசல் மாணவர்களுடன் இணைந்து மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன் திறந்து வைத்தார். உடன் வட்ட கழக செயலாளர்கள் மு.கோவிந்தராசன், வழக்கறிஞர் வி.ஏ.ராஜா மற்றும் நிர்வாகிகள் பஷீர் பாய், பரந்தாமன், வழக்கறிஞர் செந்தில் உள்ளிட்ட நிர்வாகிகள் இருந்தனர்.

## நீட் விலக்கு :

# தி.மு.க.வின் கொள்கைவழிப் போராட்டமே வெல்லும்!

# அட்டைக் கத்திகளின் சவால்களால் அல்ல!

இந்திய அளவில் மருத்துவக் கல்விக்கான நுழைவுத் தேர்வாக 'நீட்' அறிமுகம் செய்யப்பட்ட நாள் முதல், அதற்கு எதிராகத் தமிழ்நாடு தொடர்ந்து சமரசமின்றி குரல் கொடுத்து வருகிறது. தற்போது நாடு முழுவதும் நீட் தேர்வு முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவு சர்ச்சைகள் பெரும் போராட்டங்களாக வெடித்துள்ள சூழலில், மாணவர்களின் வீரமிக்க அறப்போராட்டத்தினை நாடே கவனித்துக் கொண்டிருக்கிறது.

**பா.ஜ.க. தவிர, அனைத்துக் கட்சிகளும் தங்கள் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர். அதேநேரத்தில், திமுக இல்லாமல் நீட் விலக்கினை சாதித்துவிட முடியும் என நினைக்கின்றனர். வினாத்தாள் கசிவு முறைகேடு விவகாரத்தில் தற்காலிக தீர்வு கிடைக்கலாம். ஆனால், நீட் விலக்கு என்கிற இலக்கு தி.மு.க. இல்லாமல் சாத்தியமில்லை என்பதையே காலமும் வரலாறும் நமக்கு உணர்த்துகிறது.**

தமிழ்நாட்டில் ஏழை, எளிய மற்றும் கிராமப்புற மாணவர்களின் மருத்துவக் கனவை நனவாக்கிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதியையே சாரும். 1980-களின் இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நுழைவுத் தேர்வுகள், நகர்ப்புறங்களில் உள்ள வசதி படைத்த மற்றும் லட்சக்கணக்கில் பணம் செலவழித்துத் தனியார் பயிற்சி மையங்களுக்குச் செல்லக்கூடிய மாணவர்களுக்கே சாதகமாக இருந்தன.

இதனால் கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவச் சேர்க்கை விகிதம் பெருமளவில் சரிந்ததை அடுத்து, 2006-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற கலைஞர், நுழைவுத் தேர்வுகளால் ஏற்படும் சமூகப் பாதிப்புகளை ஆராயப் பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்தார். இக்குழுவின் பரிந்துரையின்படி, 2007-ல் 'தமிழ்நாடு தொழில் முறை கல்வி நிறுவனங்கள் சேர்க்கை சட்டத்தை' கொண்டு வந்தார். அதன் மூலம் தமிழ்நாட்டில் நுழைவுத் தேர்வுகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, பிளஸ்-2 மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவச் சேர்க்கை நடைபெற்றது.



**நீரை. மகேந்திரன்**
பத்திரிகையாளர்

இச்சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றதோடு, உச்ச நீதிமன்றத்தாலும் அங்கீகரிக்கப்பட்டு, தமிழகத்தில் ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தியது. அதன்பின்னர்தான், தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும், பொறியியல் பட்டதாரிகள் உருவாகினர். அடித்தட்டு, நடுத்தர வசதி கொண்ட மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எந்தவிதமான சிரமங்களும் இன்றி, உயர்படிப்புகளில் எளிதாக சேர முடிந்தது.

இதேபோல, மருத்துவக் கல்வியில் அகில இந்தியத் தொகுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஓ.பி.சி. இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்ததில் தி.மு..க.வின் சட்டப் போராட்டம் இந்திய அளவில் மிக முக்கியமானது. மாநில அரசுகள் மத்திய தொகுப்பிற்கு வழங்கும் மருத்துவ இடங்களில், எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்ட போதிலும், ஓ.பி.சி. மாணவர்களுக்கான 27 சதவீத இடஒதுக்கீடு பல ஆண்டுகளாக மத்திய அரசுகளால் மறுக்கப்பட்டு வந்தது.

இதனை எதிர்த்து தி.மு.க. சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர் சட்டப் போராட்டங்களை நடத்தியது. இதன் விளைவாக, உயர் நீதிமன்றம் அமைத்த குழுவின் பரிந்துரையின்படி, 2021ஜூலையில் மத்திய அரசு அகில இந்தியத் தொகுப்பில் ஓபிசி மாணவர்களுக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இது தமிழக மாணவர்கள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவிலும் உள்ள பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்களின் மருத்துவக் கனவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

மருத்துவப் படிப்புக்கு அகில இந்திய நுழைவுத் தேர்வு நடத்த காங்கிரஸ் ஆட்சியில் முடிவு செய்தபோது, அதை தடுத்து பாதுகாப்பு அளித்தவர் கலைஞர்தான். ஒன்றிய அரசின் அழுத்தத்துக்கு பணிந்து 'நீட்'டுக்கு கம்பளம் விரித்தார் எடப்பாடி பழனிச்சாமி. அப்போது கழகத்தின் எதிர்ப்பும், உச்சநீதிமன்ற வழக்குகளும் விரிவாக பேச வேண்டியவன. அதன்பின்னர், 2021-ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி அமைந்ததும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு, நீட் தேர்வினால் உருவாகியுள்ள ' பொருளாதார மற்றும் கல்வி ரீதியான பாதிப்புகளை ஆராய' ஓய்வுபெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட உயர்மட்டக் குழுவை அமைத்தது.

சுமார் 86,000-க்கும் மேற்பட்ட பொதுமக்களின் கருத்துகளைப் பரிசீலித்து, விரிவான புள்ளி விவரங்களுடன் கூடிய 165 பக்க அறிக்கையை இக்குழு அரசிடம் சமர்ப்பித்தது. நீட் தேர்வுக்கு முந்தைய சேர்க்கை முறையையும், நீட் தேர்வுக்கு பிந்தைய சேர்க்கை முறையையும் ஒப்பிட்டு, இக்குழு வெளியிட்ட முக்கியப் புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியளிப்பவையாக இருந்தன.

தமிழ்நாட்டில் பிளஸ்-2 மதிப்பெண் அடிப்படையில் மருத்துவச் சேர்க்கை நடந்தபோது, அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதம் சராசரியாக 14.44 சதவீதமாக இருந்தது. ஆனால், நீட் தேர்வு வந்த முதல் ஆண்டிலேயே இந்த விகிதம் வெறும் 1.7 சதவீதமாகக் கொடூரமாகச் சரிந்தது. மேலும், நீட் தேர்வுக்கு முன் மருத்துவ இடங்களைப் பெற்ற தமிழ் வழி மாணவர்களின் எண்ணிக்கை 19.79 சதவீதமாக இருந்தது, நீட் அறிமுகத்திற்குப் பின் அது 1.6 சதவீதமாகச் சுருங்கியது; மாறாக, ஆங்கில வழி மாணவர்களின் சேர்க்கை 98 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்தது.

கிராமப்புற மாணவர்களின் சேர்க்கை விகிதம் 61.5 சதவீதத்திலிருந்து 49.9 சதவீதமாகக் குறைந்ததோடு, நகர்ப்புற மாணவர்களின் சேர்க்கை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, பிளஸ்-2 முடித்துவிட்டு நேரடியாக முதன்முறையாக நீட் தேர்வு எழுதி மருத்துவ இடம் பெற்றவர்களின் எண்ணிக்கை வெறும் 29 சதவீதம் மட்டுமே என்பதும், மருத்துவ இடம் பெற்றவர்களில் 71 சதவீத மாணவர்கள் லட்சக்கணக்கில் பணம் செலவழித்து, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தனியார் பயிற்சி மையங்களில் தங்கிப் படித்தவர்கள் என்பதும் அம்பலமானது.

நீதியரசர் ஏ.கே. ராஜன் தனது அறிக்கையில், நீட் தேர்வு என்பது தகுதியை மதிப்பிடும் தேர்வு அல்ல; அது மாணவர்களைப் பிரித்தாளும் ஒரு தேர்வு என்றும், இது தொடர்ந்தால் கிராமப்புறங்களில் பணியாற்ற மருத்துவர்கள் கிடைக்காத நிலை ஏற்படும் என்றும் மிகக் கடுமையான எச்சரிக்கையை விடுத்திருந்தது முக்கியமானது.

இந்த ஏ.கே. ராஜன் கமிட்டியின் அறிக்கைதான், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 'நீட் விலக்கு மசோதா' நிறைவேற முதன்மைத் தரவாக அமைந்தது. 2021 செப்டம்பரில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நீட் விலக்கு மசோதா முதன்முறையாக நிறைவேற்றப்பட்டது. இதனை அப்போதைய தமிழக ஆளுநர் திருப்பி அனுப்பியதைத் தொடர்ந்து, 2022 பிப்ரவரியில் மீண்டும் ஒருமுறை சட்டமன்றத்தைக் கூட்டி, ஒருமனதாக மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியது தி.மு.க. அரசு. ஆளுநர் இந்த மசோதாவை ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் வழியாகக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியதை அடுத்து, தற்போது இந்த மசோதா குடியரசுத் தலைவரிடம் நிலுவையில் உள்ளது. அதே நேரத்தில், நீட் தேர்வின் அரசியலமைப்புச் சட்டத் தன்மையை எதிர்த்து தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த அசல் வழக்கு உச்ச நீதிமன்றத்திலும் நிலுவையில் உள்ளது.

**தற்போது வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வு முறைகேடுகள் காரணமாகப் பல கட்சிகளும், புதிய மாணவர் அமைப்புகளும் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றன. எனினும், நீட் விலக்கில் தி.மு.க.வின் கடந்த போராட்டத்தை பேசாமல் 'நீட்' விலக்கினை கோரிவிட முடியாது. அதிலும் சிலரோ நீட் ஒழிக்கும் மந்திரம் என்ன வென்று திமுக சொல்ல வேண்டும் என மேடையில் விமர்சனம் செய்வதைப் பார்க்க முடிகிறது. அவர்களுக்கு இந்த வரலாறு தெரியாது. தெரிந்து கொள்ளவும் விரும்புவதில்லை. சட்டவடிவங்களும், சட்டமன்ற , நாடாளுமன்ற வடிவங்களும்தான் நீட் ஒழிப்பு மந்திரங்கள். அதை தி.மு.க. செய்தது. திமுக மட்டுமே செய்தது. அதற்கு அடிப்படையான காரணம் அதன் சமூகநீதிக் கொள்கை மற்றும் அரசியல் பலம்.**

இன்று களத்தில் உள்ள சிறிய அமைப்புகள், கட்சிகள், போராடுவது ஜனநாயக உரிமை என்கிற சூழலில், அதில் திமுகவை மறுதலிக்க முனைவது 'நீட் விலக்கு' போராட்டத்தின் வலிமையை குறைக்கும் செயல்தான். தி.மு.க. தனது பலமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நாடாளுமன்ற வளாகத்திலும், மாநிலங்களவையிலும் நேரடியாக மத்திய அரசுக்கு முட்டுக்கட்டைப் போடும் தகுதியைக் கொண்டுள்ளது. 'நீட் குறித்து முழுமையான தீர்மானகரமான முடிவை கொண்டிராத காங்கிரஸ் கட்சியினரையும் தனது அரசியல் அழுத்தங்களால் 'நீட் விலக்கு' என்கிற உறுதியை பெற்ற கட்சி தி.மு.க. என்பதுதான் கடந்த கால வரலாறு.

**தமிழகத்தில், இப்போது 'நீட்'டுக்கு எதிராகக் குரலெழுப்புபவர்களிடம் முழக்கங்கள் மட்டுமே உள்ளனவே தவிர, அதனை உச்ச நீதிமன்றத்திலோ அல்லது நாடாளுமன்றத்திலோ சட்டப் போராட்டமாக மாற்றுவதற்கான அரசியல் கட்டமைப்போ அல்லது வரலாற்றுப் பின்னணியோ இல்லை. அதேநேரத்தில், தி.மு.க.வின் நீட் எதிர்ப்பு என்பது தற்காலிகமான ஒரு தேர்தல் அரசியல் நகர்வு அல்ல. அது கலைஞரின் நுழைவுத் தேர்வு ஒழிப்புச் சட்டம், ஓபிசி 27 சதவீத இடஒதுக்கீட்டுப் போராட்டம் மற்றும் ஏ.கே. ராஜன் கமிட்டியின் அறிவியல் பூர்வமான தீர்மானத்தின் தொடர்ச்சியாக, திராவிட இயக்கத்தின் 'சமூகநீதி' மற்றும் 'மாநில சுயாட்சி' என்ற இரு கண்களின் அடிப்படையிலானது.**

சமீபத்திய தேர்வு முறைகேடுகளுக்குப் பின்னர்தான், "தமிழ்நாடு அன்றே சொன்னது" என்பதை ஒட்டுமொத்த இந்தியாவும் இன்று உணர்ந்து கொண்டு, நீட்டுக்கு எதிராகக் குரலெழுப்பத் தொடங்கியிருக்கிறது. இதுதான் தி.மு.க. அதன் கொள்கைப் பலம்தான் எதிர்காலத்தை முன்னோக்கிக் கவனிக்கிறது. கணிக்கிறது. தமிழ்நாட்டில் கொள்கை பலம் இல்லாதவர்களின் கூடாரத்தில் 'நீட்' எதிர்ப்பு குரல் என்பது, அட்டைக் கத்திக்கு கூர்த்தீட்டுவதற்குச் சமம்.